සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

62 T I

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் .......................................** **குடியியற் கல்வி I** **நேரம் : 3 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பண்டைய காலம் முதல் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆட்சி முறைகள் இரண்டை உள்ளடங்கிய விடை,
    1) மன்னராட்சி முறை, சட்ட ஆட்சி முறை
    2) பிரபுத்துவ ஆட்சிமுறை, சட்ட ஆட்சி முறை
    3) சர்வதிகார ஆட்சிமுறை, சட்ட ஆட்சி முறை
    4) மன்னராட்சி முறை, சட்ட ஆட்சி முறை

02. நேரடி சனநாயகம் காணப்பட்ட நாடு ஒன்றானது,
    1) உரோமம் 2) கிரேக்கம் 3) பிரித்தானியா 4) பிரான்ஸ்

03. எதென்ஸ் நகராட்சியில் காணப்பட்ட பிரதான ஆட்சி நிறுவனமானது,
    1) சட்ட சபை 2) மன்னர் மன்றம் 3) மக்கள் மன்றம் 4) முதலாளி மன்றம்

04. மக்கள் அனைவரும் நாட்டின் ஓரிடத்தில் ஒன்று கூடி நேரடியாகவும் விரைவாகவும் அரசாட்சி நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடி அவரகளின் விருப்பத்திற்கமைய தீர்மானம் எடுக்கும் முறையானது,
    1) நேரடி சனநாயகம் 2) மறைமுக சனநாயகம்
    3) பிரதிநிதித்துவ முறை சனநாயகம் 3) லிபரல் சனநாயகம்

05. கி.மு 6ம் நூற்றாண்டில் இந்தியாவின் ''வஜ்ஜி'' எனும் ஆரியரின் குடியேற்ற அரசொன்றில் நிலவிய ஆட்சி முறை,
    1) விவசாய பொருளாதார முறை 2) குழுவாட்சி முறை
    3) தனியாட்சி முறை 3) வர்த்தகப் பொருளாதார முறை

06. அமைதிப் புரட்சி எனப்படுவது,
    1) பிரான்சிய புரட்சி 2) ரஷ்யப் புரட்சி 3) அமெரிக்கப் புரட்சி 4) ஆங்கில புரட்சி

07. சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி முறையாகும்'' எனக் குறிப்பிட்டவர்,
    1) ஆபிரகாம் லிங்கன் 2) சீலர்
    3) பேராசிரியர் காணர் 4) அரிஸ்டோட்டில்

08. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால் ஒன்றானது,
    1) தற்கால அரசுகளில் நிலப்பரப்பு விசாலமாகக் காணப்படல்.
    2) அரசுகள் குறைந்த சனத்தொகையைக் கொண்டிருத்தல்.
    3) சமூகத் தேவைகள் எளிதாகக் காணப்படுதல்.
    4) எல்லாப் பிரச்சினைகளையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டிட முடிகின்றமை.

09. தற்கால வாக்குரிமை எனப்படுவது,
    1) 18 வயது பூர்த்தியானவர்களுக்கு வழங்கப்படும் வாக்குரிமை.
    2) குறித்த வயதெல்லையைக் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் வாக்குரிமை.
    3) ஆண், பெண், தொழில் என்ற வேறுபாடு இன்றி வழங்கப்படும் வாக்குரிமை.
    4) குறித்த வயதெல்லையைக் கொண்ட சகலருக்கும் வேறுபாடின்றி வழங்கப்படும் வாக்குரிமை.

10. இலங்கை குடியரசின் மக்களுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள இறைமைகளை உள்ளடக்கிய விடையானது.
    1) ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை
    2) அடிப்படை உரிமைகள், வாக்குரிமை, அடிப்படை கடமைகள்
    3) அடிப்படை உரிமைகள், வாக்குரிமை, சட்ட அதிகாரம்
    4) அடிப்படை கடமைகள், ஆட்சி அதிகாரம், சட்ட அதிகாரம்.



kalvi.lk

11. சனநாயக ஆட்சி முறையின் கீழ் உள்ள அரச துறைகளில் ஒன்று அல்லாதது,
1) சட்டத்துறை 2) நிறைவேற்றுத்துறை 3) நீதித்துறை 4) பொருளாதாரத்துறை

12. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருப்பது,
1) தேர்தல் தொகுதி ஆணைக்குழு மூலம் 2) சனாதிபதி ஆணைக்குழு மூலம்
3) எல்லை நிர்ணய ஆணைக்குழு மூலம் 4) அளவீட்டு ஆணைக்குழு மூலம்

13. தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது பயன்படுத்தப்படும் பிரதான அளவீட்டு நியதிகளாவன:
1) நிலப்பரப்பு 2) சனத்தொகை
3) நிலப்பரப்பும் சனத்தொகையும் 4) நிலப்பரப்பு, சனத்தொகை, சனநாயகம்

14. ஆளுங்கட்சி எனப்படுவது,
1) பெரும்பான்மை பிரதிநிதிகளை பெற்றுக்கொள்ளாத கட்சி.
2) தேர்தலில் பெரும்பான்மை பிரதிநிதிகளை பெற்றுக் கொள்ளும் கட்சி.
3) ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
4) எதிகட்சியாகவும் செயற்படல்.

15. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகளில் ஒன்று,
1) குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறாமை.
2) தேர்தல் சட்டதிட்டங்களுக்கமைய தேர்தல் நடைபெறுதல்.
3) சுமூகமான சூழலில் தேர்தல் நடத்தப்படாமை.
4) சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை காணப்படாமை.

16. எதிர்கட்சி எனப்படுவது,
1) தேர்தல் பெருபான்மை பிரதிநிதிளைக் பெற்றுக்கொள்ளும் கட்சி.
2) ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கட்சி.
3) தேர்தலில் குறைந்த பிரதிநிதிகளைக் பெற்றுக்கொண்ட கட்சி அல்லது கட்சிகள்.
4) தேர்தலில் கலந்துகொள்ளாத கட்சி.

17. வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலமையானது,
1) சமத்துவம் 2) உரிமைகள் 3) சுதந்திரம் 4) உடமை

18. கி.பி 1948 டிசம்பர் மாதம் 10ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை மூலம் வெளியிடப்பட்டது,
1) அடிப்படை உரிமைகள் பிரகடனம் 2) சிறுவர் உரிமைகள் பிரகடனம்
3) மனித உரிமைகள் பிரகடனம் 4) பெண்கள் உரிமைகள் பிரகடனம்

19. இரு கட்சி முறை நிலவும் ஒரு நாடு,
1) கியூபா 2) ஐக்கிய அமெரிக்கா 3) இந்தியா 4) சீனா

20. "மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சி முறையாகும்" எனக் குறிப்பிட்டவர்,
1) சீலர் 2) பேராசிரியர் காணர் 3) ஆபிரகாம் லிங்கன் 4) அரிஸ்டோட்டில்

- **கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 21ம் வினாவுக்கு விடையளிக்க**.

A - மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுதல்
B - நீதித்துறை சுதந்திரம் பாதிக்கப்படல்
C - ஆட்சியாளர்களை சனநாயக வழியில் இட்டுச் செல்லல்
D - அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்

21. மேலுள்ளவற்றில் சனநாயக சமூகத்தின் நடைமுறை சுதந்திர ஊடகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்களாவன,
1) AB 2) BC 3) AC 4) AD

22. நீதித்துறையின் சுதந்திரம் எனப்படுவது,
1) நீதித்துறையானது அரசியல் யாப்பின் மூலம் ஏனைய துறைகளினதும் தனியார்களினதும் தடைகளுடன் இயங்குதல்.
2) அரசியல் யாப்பின் மூலம் தனியார் துறையின் தலையீடுகள் இன்றி செயற்படல்.
3) அரச துறையின் தலையீடுகள் இன்றி செயற்படல்.
4) அரசியல் யாப்பின் மூலம் ஏனைய துறைகளினதும் தனியார் துறையினதும் தலையீடுகளின்றி இயங்குதல்.



kalvi.lk

23. சட்ட ஆட்சியின் நடைமுறைப்பண்பானது,
1) அனைவரும் சட்டத்தை மதித்தல், அடிபணியாதிருத்தல், சட்டத்தை மீறாதிருத்தல்.
2) குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல்.
3) சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சர்வசாதாரணமாகக் கிடைத்தல்.
4) சந்தேகத்தின் பெயரில் எவரையேனும் கைது செய்தல்.

24. சுதந்திரமும் மற்றும் சமத்துவம் ஆகிய பண்புகள் சமூகத்தில் செயற்பட வேண்டுமாயின்,
1) உடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். 2) உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
3) சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். 4) சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

25. மனித உரிமைகள் எனப்படுவது,
1) மனிதனுக்கு பிறப்பின் மூலம் கிடைப்பது.
2) சகல வளங்களையும் எல்லையின்றி பயன்படுத்தும் உரிமை.
3) திறமைகளை வளர்த்துக் கொள்வது.
4) சட்டத்தை உருவாக்குவது.

26. கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையானது,
1) பொருளாதார உரிமை 2) அரசியல் உரிமை
3) கலாச்சார உரிமை 3) சமூக உரிமை

27. சனநாயக ஆட்சிமுறையில் மக்களின் அபிப்பிராயங்களைப் கட்டியெழுப்புவது தொடர்பாக சிறப்பாக செயற்பட அவசியமானது,
1) ஊடக சுதந்திரம் 2) மனித சமூகம்
3) அரசாட்சி 3) தலையீடு செய்யும் ஒரு கூட்டம்

28. அரசியல் கட்சி முறையின் அனுகூலமொன்றானது,
1) மக்கள் தமது கருத்துக்களை பிரதிநிதிப்படுத்த வாய்ப்பு கிடைக்காமை.
2) தான்தோன்றித்தனமான ஆட்சி நடத்துதல்.
3) பல்வகைமையில் ஒன்றுபட்டு செயற்பட வழி ஏற்படுதல்.
4) ஒன்றுமையில் வேற்றுமையைக் கட்டியெழுப்புதல்.

29. சனநாயகத்தை கட்டியெழுப்பும் போதான பிரதான எண்ணக்கருக்கள்.
1) சுதந்திம், சமத்துவம், உரிமைகள் 2) உரிமைகள், கடமைகள், சமத்துவம்
3) சுதந்திரம், கடமைகள், உரிமைகள் 4) சுதந்திரம், சமத்துவம், கடமைகள்

30. அரசு என்பது
1) பல்வேறு மாற்றம் ஏற்படும் நிறுவனமாகும்.
2) தேசிய எல்லைகளை தாண்டி செயற்படும் நிறுவனமாகும்.
3) நிலையான நிறுவனமாகும்.
4) நீதித்துறையினால் செயற்படுத்தப்படும் நிறுவனமாகும்.

31. கீழே தரப்பட்ட தகவல்களுக்கமைய அரசின் செயற்பாடுகளைத் தெரிவு செய்க.
A - நீதி, மனித உடமை மற்றும் சமாதானத்தை பேணுதல்.
B - நாட்டு மக்களின் சொந்த நோக்கங்களுக்காக பாடுபடல்.
C - அரசியல் யாப்பின் பாதுகாவலராக செயற்படல்.
D - நிறைவேற்றுத் துறையை வழிநடத்தல்.
1. AB 2. BC 3. AC 4. CD

32. இலங்கை குடியரசின் 2ம் குடியரசு யாப்பு (1978) குறிப்பிடும் விடயமானது,
1) அரசின் யாப்பு மற்றும் கடமைகளை பாதுகாத்தல்.
2) பொது சொத்துக்களை வீண்விரயம் செய்தல்.
3) ஏனையோருடைய உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் மதிப்பளித்தல்.
4) மனசாட்சிக்கு துரோகம் செய்தல்.

33. அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்களுக்கான உதாரணமானது,
1) அரசியல் யாப்பிற்கமைய செயற்படாதிருத்தல்.
2) சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்.
3) வீட்டு சூழலைப் பாதுகாத்தல் பராமரித்தல்.
4) சட்டத்தையும் நியாயத்தினையும் பேணாதிருத்தல்.

34. நாட்டின் வளங்களை நியாயமாக பகிர்ந்தளிப்பது,
1) பிரசைகள் அனைவரினதும் கடமையாகும்.
2) அதிக இலாபம் பெறுபவர்களின் கடமையாகும்.
3) பிரதிநிதிகளின் கடமையாகும்.
4) அரசின் கடமையாகும்.



kalvi.lk

35. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்பு ஒன்றானது
   1) அரச தலைவரும் அரசாங்கத் தலைவரும் சனாதிபதியாவார்.
   2) சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையைப் பதவி விலக்க முடியும்.
   3) நிறைவேற்றுத் துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் சனாதிபதியாவர்.
   4) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படாது.

36. சட்டத்துறையின் மூலம் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது,
   1) சட்டத்துறை 2) நீதித்துறை 3) நிறைவேற்றுத்துறை 4) அரசாங்கம்

37. தேர்தலில் மக்களுக்கு விருப்பமான அரசினை உருவாக்குதல்,
   1) அரச கடமையாகும். 2) மக்களின் கடமையாகும்.
   3) ஆட்சியாளர்களின் கடமையாகும். 4) வாக்காளர்களின் கடமையாகும்.

38. சுமூகமான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதனால்,
   1) ஆட்சியாளர்களுக்கு விரும்பியவாறு தீர்மானம் எடுத்தல்.
   2) சிறுபான்மையினரின் கருத்துக்களை மதிக்காதிருத்தல்.
   3) பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மாத்திரம் மதிப்பளித்தல்.
   4) கலந்துரையாடல் மூலம் தீர்மானங்ளை எடுத்தல்.

- **கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.**

A - இரு வகையான அரசாங்கங்கள் செயற்படுத்தப்படல்.
B - ஒரு மத்திய அரசின் கீழ் அதிகாரங்கள் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்.
C - நீதி,சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரங்கள் மத்திய அரசு மற்றும் மாநில அரசாங்கங்களினால் நிறைவேற்றப்படும்.
D - பிரதேச,நிர்வாக நிறுவனங்கள் மூலம் மத்திய அரசால் வழங்கப்படும் நிர்வாக அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
E - ஆட்சி நிறுவனங்கள் இரண்டைக் கொண்டது.
F - சட்டவாக்கம்,நிறைவேற்று, நிதித்துறைகளை நடைமுறைப்படுத்துவது மத்திய அரசாகும்.

39. மேலே தரப்பட்டுள்ளவற்றில் ஒற்றை ஆட்சியில் காணக்கூடிய பண்புகளைக் கொண்ட விடைத்தொகுதி.
   1) ABC 2) BDF 3) BCF 4) DEF

40. மேலே தரப்பட்டுள்ளவற்றில் கூட்டாட்சியில் காணக்கூடிய பண்புகளைக் கொண்ட விடைத்தொகுதி
   1) ACE 2) CDF 3) BDE 4) DEF

* * *



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
Provincial Department of Education - NWP
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

62 T II

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

சுட்டிலக்கம் ........................................ குடியியற் கல்வி II நேரம் : 3 மணித்தியாலம்

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க.**

01. i) சனநாயக ஆட்சி முறையின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக.
ii) பல கட்சி முறை நிலவும் நாடுகள் 2 தருக?
iii) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப் பின்பற்றப்படும் தேர்தல் முறைகள் இரண்டும் எவை?
iv) அரசுகளின் மூலகக்கூறுகள் 2 குறிப்பிடுக.
v) அரசு தொடர்பான வரைவிலக்கணங்களை முன்வைத்த இருவரது பெயர் தருக.
vi) ஐரோப்பாவில் முதலில் தோற்றம் பெற்ற அரசுகள் இரண்டு குறிப்பிடுக.
vii) அரசாங்க முறைகளின் இரு வகைகளும் எவை?
viii) பிரசைகளின் பிரதான கடமைகள் இரு வகைப்படும் அவை எவை?
ix) மனித அபிவிருத்திக்கு தாக்கம் செலுத்தும் காரணிகள் 2 தருக.
x) மக்களின் வாழ்க்கைத் தரம் சிறப்படையும் பொருட்டு அரசு மேற்கொண்டுள்ள பிரதான வேலைத்திட்டங்கள் 2 குறிப்பிடுக.

($2x10=20$ புள்ளிகள்)

02. i) எதென்ஸ் நகராட்சியில் பங்குகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படாத இரு சமூக குழுக்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
ii) நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் 3 குறிப்பிடுக.
iii) i) சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவம் 2 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
ii) சனநாயகம் ஒரு வாழ்க்கை முறையாக முக்கியம் பெறுவதற்கான காரணிகள் 3 குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

03. i) அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)
ii) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் 3 தருக. (3 புள்ளிகள்)
iii) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் 3 இனைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5புள்ளிகள்)

04. i) அரசியல் யாப்பின் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)
ii) சனநாயக ஆட்சி முறை இடம்பெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கு அமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
iii) சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 3 குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

05. i) தேசிய அரசின் பிரதான பண்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)
ii) தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணிகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
iii) நிகழ்கால அரசின் பொறுப்புக்கள் 3 குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

06. i) பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)
ii) சனாதிபதி அரசாங்க முறையின் விஷேட பண்புகள் 3 தருக. (3 புள்ளிகள்)
iii) அதில் ஒரு துறையினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் 2 தருக. (5 புள்ளிகள்)

07. i) சனநாயக ஆட்சிமுறை வெற்றிபெற அவசியமான காரணிகள் 2 தருக. (2 புள்ளிகள்)
ii) சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவம் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
iii) சனநாயகப் பிரசைகளிடம் காணப்படும் பண்புகள் 3 குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

**முதலாம் தவணைப் பரீட்சை - 2018**
**குடியியற் கல்வி**
**தரம் 10 - விடைகள்**
**பகுதி I**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11) | 4 | 21) | 3 | 31) | 4 |
| 2) | 2 | 12) | 3 | 22) | 4 | 32) | 3 |
| 3) | 3 | 13) | 3 | 23) | 3 | 33) | 2 |
| 4) | 1 | 14) | 2 | 24) | 2 | 34) | 4 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 1 | 35) | 2 |
| 6) | 4 | 16) | 3 | 26) | 4 | 36) | 3 |
| 7) | 2 | 17) | 3 | 27) | 1 | 37) | 4 |
| 8) | 1 | 18) | 3 | 28) | 3 | 38) | 4 |
| 9) | 4 | 19) | 2 | 29) | 1 | 39) | 2 |
| 10) | 1 | 20) | 3 | 30) | 3 | 40) | 1 |

**பகுதி II**

01. i) நேரடி சனநாயகம், மறைமுக சனநாயகம்
ii) இலங்கை,இந்தியா
iii) எளிய பெருபான்மை பிரதிநிதித்துவம் முறை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை
iv) நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை
v) பேராசியர் காணர், அரிஸ்டோட்டில்
vi) இங்கிலாந்து ஸ்பெயின், பிரான்ஸ்
vii) பாராளுமன்ற அரசாங்க முறை, சனாதிபதி அரசாங்க முறை
viii) சட்டரீதியான கடமைகள், பண்பாட்டு ரீதியான கடமைகள்
ix) உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், தொழில்
x) கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, போக்குவரத்து, சமூகப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, வேலைத்திட்டங்கள், முதியோர் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள்.

(2x10=20 புள்ளிகள்)

02. i) பெண்கள்,வெளிநாட்டவர்கள், அடிமைகள்

ii) தற்கால அரசுகளில் நிலப்பரப்பு விசாலமாகக் காணப்படல்
அரசுகள் அதிக சனத்தொகையைக் கொண்டிருத்தல்
சமூகத் தேவைகளில் சிக்கல் வாய்ந்த தன்மை
எல்லாப்பிரச்சனைகளையும் ஓரிடத்தில் திரட்டுவதில் உள்ள சிரமம்

iii) i) பெருபான்மை மக்கள் விருப்பத்திற்கு அமைய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும்
பெரும்பான்மை மக்களின் வாக்கினைப் பெற்ற கட்சிக்கு அதிகாரம் உரித்துடையதாகும் (5ம் பக்கம்)

ii) பிறர் கருத்துக்களை மதித்தல், கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை எடுத்தல், சமத்துவம் பேணல், உரிமைகளை அனுபவிப்பதோடு கடமைகளை நிறைவேற்றல்.

03. i) தான்தோன்றித் தனமான ஆட்சியைத் தடுத்தல் :-
பலவகைமையில் ஒன்றுபட்டு செயற்பட வழி ஏற்படல் (8ம் பக்கம்)

ii) அனைவரது கருத்துக்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் பிரதிநிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு
தேர்தல் தொகுதிகளுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பு
பிரதேச அபிவிருத்தி (11ம் பக்கம்)

iii) குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறல்
தேர்தல் சட்டதிட்டங்குளுக்கமைய தேர்தல் நடைபெறல்
சுகமான சூழலில் தேர்தல் நடாத்தப்படல் (12ம் பக்கம்) (விளக்கத்திற்கு புள்ளி வழங்கவும்)



kalvi.lk

04. i) அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்களான சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை கட்டமைப்பு
நீதித்துறை கட்டமைப்பு
பிரசைகளுக்குரிய அடிப்படை உரிமைகள் (16ம் பக்கம்)

ii) ஆட்சியின் சீரான தன்மையும் அதன் நிலையையும் பாதுகாத்தல்.
நீதித்துறை சுதந்திரம் பாதுகாக்கப்படல்.
அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல். (16ம் பக்கம்)

iii) ஆளுங்கட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
மிகக் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்கு செயற்படல்.
ஆளுங்கட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
மிகக் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதிற்கு செயற்படல்.
ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தல்.
(பொருத்தமான விளக்கம்) (13ம் பக்கம்)

05. i) ஓர் இனத்திற்கு ஓர் அரசு என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
நிலம்,மக்கள்,தொகை,அரசாங்கம், இறைமை என்ற மூலக்கூறுகளைக் கொண்டிருத்தல்.
(20ம் பக்கம்)

ii) புரட்டஸ்தாந்து மத சீர்திருத்த இயக்கம்.
விஞ்ஞான மறுமலர்ச்சி.
மானிய முறை வீழ்ச்சியும் முதலாளித்துவத்தின் எழுச்சியும் விஞ்ஞான அறிவு வளர்ச்சி அடைந்தமை.

iii) சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாத்தல்.
சமூக நல சேவைகளை வழங்கல்.
பொதுச் சேவைகளை நடாத்திச் செல்லல். (21ம் பக்கம்)
(பொருத்தமான விளக்கம்)

06. i) சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படும்.
சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையை பதவி விலக்க முடியும்.

ii) நிறைவேற்றுத்துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் சனாதிபதியாவார்.
அரச தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் சனாதிபதியாவார்.
நிறைவேற்றத்துறை, சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக்கூற அவசியம் இல்லை.

iii) i) சட்டத்துறை - ii) சட்டத்தை உருவாக்குதல்.
நிதி நிர்வாகம்.

நிறைவேற்றுத் துறை- சட்டத்துறையினால் உருவாக்கப்படும்.
சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
உறுப்பினர்கள் பொதுத்தேர்தலின் போது பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட அரசியல் கட்சியில் இருந்து தெரிவு செய்யபடுவர்.

நீதித்துறை - நியாயத்தை நிலை நிறுத்துதல்.
மக்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் .

07. i) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்.
சட்டத்தின் ஆட்சி நடைபெறல்.
நீதித்துறை சுதந்திரமாக செயற்படல்.
அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்.

ii) சமமான உரிமைகள் கிடைக்கபெறல்.
தனிநபர் இயலுமைக்கும் திறமைக்கும் ஏற்ற சந்தர்ப்பம் காணப்படல்.
பிரசைகளுக்கு ஆட்சியில் பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தல் தனி மனித அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்தல்.

iii) கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களுக்கு வரல்.
ஒத்துழைப்புடன் செயற்படல்.
சட்டத்திற்கு மதிப்பளித்தல்.
(பொருத்தமான விளக்கம்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457